DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 6 |
| Name | : | **திரு. சுரேஷ்** |
| Father's Name | : | **பழனியாண்டி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது புல்லாம்பட்டியில் குடியிருந்து நாட்டுக்கோழி வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி செல்வம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். கடந்த 2020 ம் வருடம் 5 ம் மாதம் தேதி எனக்கு ஞாகபமில்லை. நான் கோழி வாங்க செல்லும்போது திருமலைக்குடி என்ற இடத்திற்கு அருகே காலை சுமார் 6.30 மணியளவில் வந்து கொண்டிருந்தேன். அந்த புழுதிப்பட்டி போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். போலிசார் அந்த இடத்தில் எதற்காக நின்று கொண்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் கையொப்பம் போடும்படி கேட்டார்கள். நான் எனது கையொப்பத்தை போட்டுக்கொடுத்தேன். நான் கையொப்பம் செய்த இடத்தில் ஆஜர் எதிரிகளை பார்க்கவில்லை.

2. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் உலகம்பட்டி காவல் வட்ட ஆய்வாளர் காலை 6.30 மணியளவில் தயாரித்த பார்வை மகஜரில் உள்ள சுரேஷ் என்ற முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2** ஆகும். கடந்த 14.05.2020 ம் தேதி காலை 8.30 மணியளவில் உலகம்பட்டி காவல் வட்ட ஆய்வாளர் தயாரித்த பார்வை மகஜரில் உள்ள சுரேஷ் என்ற முதல் கையொப்பம் என்னுடையது தான் அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3** ஆகும். தற்போது காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர்கள் மற்றும் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையது அல்ல. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 14.05.2020 ம் தேதி நான் சொந்த வேலையாக எனது ஊரான புல்லாம்பட்டி மாதங்கருப்பர் கோவில் அருகே வந்துகொண்டிருந்தேன் என்றும் அப்போது உலகம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் சம்பவயிடங்களை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் பின்பு அன்று காலை 7.00 மணியளவில் சம்பவயிடத்திலிருந்து ரத்தம் பட்ட மண் மற்றும் ரத்தம் படாத மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் பின்பு மதியம் 12.15 மணியளவில் திருமலைக்குடி பஸ் நிறுத்தம் அருகே இருசக்கரவாகனத்தில் வந்த இந்த வழக்கின் எதிரிகளான கருப்பையா, முருகேசன் ஆகியோர்களை கைது செய்து விசாரித்தார்கள் என்றும் பின்னர் அவர்கள்

தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் பதிவு செய்து கொண்டு அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் பின்பு கருப்பையா ஆஜர் செய்த மோட்டார்சைக்கிளில் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளையும் மகஜரில் கைப்பற்றினார் என்றும் பின்பு அன்று மாலை 4.00 மணியளவில் எதிரி முருகேசன் என்பவர் அவரது மாட்டுக்கொட்டகையின் பக்கம் மறைத்து வைத்திருந்த இரும்பு பைப் மற்றும் கட்டைக் கம்பையும் போலிசார் அத்தாட்சிகளில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் உடனிருந்து கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.16 17:02:34 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை..**